**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

S.C. 141/2017

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 07 ம் நாள் செவ்வாய் கிழமை PW9 -இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc., B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

Deposition of LW12 Examined as PW9.

| | | |
|---|---|---|
| Date | : | 07.01.2025 |
| Name | : | டாக்டர் . அறிவழகன் |
| Husband Name/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Post | : | |
| Religion | : | |
| Age | : | |

A1 present. A2 absent. Petition filed and allowd.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் தற்போது சீர்காழி அரசு மருத்துவமனையில் குடிமுறை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 12.08.2012 அன்று மாலை 4 .30 மணியளவில் செந்தில் குமார் த/பெ. சுப்பையா ஆய்வாளர், சீர்காழி காவல் நிலையம் என்பவரை அன்பழகன் என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வந்தார். அவர் கூறியதாவது அதே தினம் மாலை 4 மணியளில் திருவாலி ஏரி அருகே அடையாளம் தெரிந்த 2 நபர்களால் தாக்கப்பட்டதாக தகவல் கூறினார்அவர் சுய நினைவுடன் இருந்தார். அவரை பரிசோதனை செய்ததில் 2x2 cm அளவுள்ள வலது கண் புருவத்தில் காணப்பட்டது. மேலும் அவருக்கு சிராய்பு காயம் வலது முன் கையில் காணப்பட்டது. அவர் உள்நோயாளியாக அனுமதித்துசிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்டது சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். **அந்த காயச்சான்று அ.சா.ஆ. 4 ஆகும்**. போலிசார் விசாரணை செய்தார்கள்.

**1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

அ.சா 1 சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட போது சுய நினைவுடன் இருந்தார் என்றால் சரிதான். எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தார் என்றால் அதற்குரிய ஆவணங்களை நான் எடுத்துவரவில்லை. அ.சா 1 மேல் சிகிச்சை அல்லது தொடர் சிகிச்சை எடுத்துக் கொண்டாரா என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். 14.01.2012 ல் வழக்கு சம்பந்தமாக போலிசார் விசாரணை செய்தார்கள். என்னை யார் விசாரணை செய்தார்கள் என்றால் கண்ணன். பைக்கில் ரோட்டில் செல்லும் போது கவனக்குறைவாக தடுமாறி விழுந்தாலும் மேற்கண்ட காயங்கள் ஏற்பட வாய்புள்ளது என்றால் சரிதான். அ.சா. 1க்கு காயம் ஏற்படவில்லை என்றாலும் போலிசார் கட்டாயப்படுத்தியதால் சாதாரண காயம் ஏற்ப்பட்டதாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.